# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශේෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/27—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/27 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(70)/76.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976, டிசெம்பர் 17 ஆந் தேதி.

**ஒழுங்குவிதிகள்**

1. எழுத்திலான வேறெந்தச் சட்டத்திலும் எது எவ்விதமிருப்பினும், இதனோடுள்ள அட்டவணையின் I ஆம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூரதிகாரசபை ஒவ்வொன்றினதும் அலுவலர்களின் நிர்வாகம், 1976 டிசெம்பர் 17 ஆம் திகதியிலிருந்து இந்த ஒழுங்குவிதிகள் எவ்வளவு காலத்துக்கு வலுவிலிருக்கின்றனவோ அவ்வளவு காலத்துக்கு மட்டும, அக்காலத்துக்கு மட்டுமே, அத்தகைய உள்ளூரதிகாரசபை அமைந்துள்ள நிர்வாகப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு உரித்தாக்கப்படல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க, அத்தகைய உள்ளூரதிகாரசபை ஒவ்வொன்றினதும் அலுவல்களின் நிர்வாகம் உரித்தாக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முற்கூறப்பட்டுள்ள காலத்தின்போது, அந்த அட்டவணையின் II ஆம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்களின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ், அதன் உள்ளூரதிகாரசபையினதும் அதன் தவிசாளரினதும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

2. ஒழுங்குவிதி 1 இலுள்ள " உள்ளூர் அதிகாரசபை " என்னுஞ் சொல்லமைப்பு ஏதேனும் பட்டினசபை அல்லது கிராமச்சபை எனப் பொருள்படும்.

**அட்டவணை**

| நிரை I | நிரை II |
|---|---|
| வளவ்வை கிராமச்சபை .. | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| ஒத்தறபலாத்த தெற்கு கிராமச்சபை | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| சித்தறம்பலாத்தை கிராமச்சபை | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| பெம்முல்லே கிராமச்சபை .. | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| மாதம்புவக் கோறளை கிராமச்சபை | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| உறகஸ்மன் ஹந்திய கிராமச்சபை | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| பொலன்னறுவை பட்டினசபை | .. பட்டினசபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 256) |
| நாத்தாண்டியா பட்டினசபை | .. பட்டினசபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 256) |
| பெனதோட்டை பட்டினசபை | .. பட்டினசபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 256) |
| திம்புல கிராமச்சபை .. | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| இப்பகமுவ கிராமபபிரதேசத்துக் கிராமச்சபை | கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| கந்தஹறய தெற்கு இல. 2 கிராமச்சபை | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |
| உடபனே கிராமச்சபை .. | .. கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது